செ.வெ.எண்:584 நாள்:12.7.2010

# ஸ்ரீ ஹரி கோட்டா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 5 செயற்கை கோள்களுடன் பி. எஸ். எல். வி. சி–15 ராக்கெட் இன்று வெற்றிகரமாகப் பறக்கவிடப்பட்டது!

## முதலமைச்சர் கலைஞர் இந்திய விஞ்ஞானிகளுக்கு பாராட்டு!

இந்திய விண்வெளித் துறையில் மற்றும் ஒரு சாதனையாக ஸ்ரீ ஹரி கோட்டா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஐந்து செயற்கைக் கோள்களுடன் பி. எஸ். எல். வி. சி–15 என்னும் ராக்கெட் இன்று காலை வெற்றிகரமாகப் பறக்கவிடப்பட்டுள்ளது. இந்த வெற்றிச் செய்தி கிடைத்தவுடன் முதலமைச்சர் கலைஞர் இந்திய விண்வெளித் துறை விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு.

நமது நாட்டு விஞ்ஞானிகளின் கடுமையான உழைப்பின் பயனாக விண்வெளி ஆராய்ச்சித் துறையில் இந்தியா உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்து, படிப்படியாக முன்னேறி வருகிறது. ஸ்ரீ ஹரி கோட்டாவில் இருந்து இன்று பறக்கவிடப்பட்ட பி. எஸ். எல். வி. சி–15 ராக்கெட் 694 கிலோ எடையுள்ள இந்திய விஞ்ஞானிகள் தயாரித்துள்ள கார்டோ சாட்–2பி, அல்ஜீரியா நாட்டைச் சேர்ந்த 116 கிலோ எடை கொண்ட அல்சாட் செயற்கை கோள், கனடா, சுவிட்சர்லாந்து நாடுகளைச் சேர்ந்த 2 “நானோ” செயற்கை கோள்கள், என்ஜினீயரிங் கல்லூரி மாணவர்கள் தயாரித்த குறும் செயற்கை கோள் ஆகிய 5 செயற்கை கோள்களைச் சுமந்து கொண்டு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்து சென்று, நமது நாட்டு விஞ்ஞானிகளின் மகத்தான ஆற்றலை உலகுக்குப் பறைசாற்றியுள்ளது.

இந்த மகத்தான சாதனையை நிகழ்த்தியுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சித் துறை விஞ்ஞானிகள் அனைவருக்கும் தமிழக மக்களின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என முதலமைச்சர் கலைஞர் தெரிவித்துள்ளார்.

*****

வெளியீடு:

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.